சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற ஓரியாக் கவிதைகள்

வசீகரிக்கும் தூசி

பிரதீபா சத்பதி

தமிழில்

மதுமிதா

Digitized by PPRACHIN, SOA

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. (பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

Digitized by PPRACHIN, SOA

சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற ஒரியா கவிதைதொகுப்பு

வசீகரிக்கும் தூசி

பிரதீபா சத்பதி

தமிழில்

மதுமிதா

சாகித்திய அகாதெமி

Digitized by PPRACHIN, SOA

Vaseekarikkum Thoosi: Translation in Tamil by Madhumitha of Sahitya Akademi Award winning Oriya Poetry 'Tanmaya Dhuli' by Pratibha Satpathy, Sahitya Akademi, New Delhi. 2010. Rs. 60.

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: 2010

ISBN - 81-260-2692-0

சாகித்திய அகாதெமி
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூரு 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

4, டி. எல். கான் சாலை, கொல்கத்தா - 700 025

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ. 60/-

அச்சு: வி.பி.கே. ஆஃப் செட், சென்னை - 600 005.

Digitized by PPRACHIN, SOA

உள்ளே...

1. இதயத்தின் கதாநாயகி 7
2. பயமுறுத்தும் வானவில் 9
3. தொலைத்த கணங்கள் 11
4. சரியாக மையத்தில் 13
5. சொற்களின் மந்திரவாதி 14
6. எங்கே எடுத்துச் செல்கிறாய் என்னை? 16
7. வெறுமையின் சக்ரவர்த்தினி 19
8. இறுதியான துரதிர்ஷ்டம் 21
9. இடிபோன்ற அணைப்பு 24
10. ஏரி 27
11. அதிகாலையில் 31
12. நிலவின் ஒளிகற்றைகள்-குட்டை 32
13. கற்பூர மழை 33
14. தேன்குடம் 34
15. சிப்பி 35
16. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத 37
17. தப்பி ஓடிப்போனவன் 41
18. வெந்நிற இருள் 43
19. எனக்குப் புரியவில்லை 45
20. உருவமிலா சிலை 47
21. பந்தம் 49
22. நாளை காலை 51

Digitized by PPRACHIN, SOA

23. நான் போக வேண்டும்	53
24. முக்தி	55
25. இல்லாத கனவுகள்	57
26. நீ கிடைப்பது என்றால்	60
27. கரையின் மறுபக்கம்	62
28. கலங்கரை விளக்கின் உள்ளே	64
29. கையெழுத்து	66
30. சிம்மாசனம்	68
31. நேசிக்க	70
32. தூக்கி எறிய இயலவில்லை	71
33. தேடுகிறாயா என்னை?	73
34. ஓவியன்	75
35. சாதாரண நிகழ்வுகள்	77
36. சாட்சி	79
37. அனைத்தையும் நேசிக்க	81
38. எனில், திரும்பிச் செல்லலாம்	83

Digitized by PPRACHIN, SOA

1
இதயத்தின் கதாநாயகி

கேள்
வேறு எவராலுமில்லை
என்னைச் சுற்றி
நானே பின்னிக்கொண்ட வலையில் சிக்கிக்கொண்டு
என்னை நானே வதைத்துக் கொண்டிருக்கிறேன்

வேதனையளிக்கும் வெட்கக்கேட்டை
எனக்கு நானே தருவித்துக் கொண்டேன்
நம்பிக்கை துரோகம் செய்யும் முகங்களையும்
அவர்களின் நல்லவர் போன்ற நடிப்பையும்
நேரடியாய் கண்டதனால்
ஏற்பட்ட ஆழ்ந்த காயத்திலிருந்து
எனக்குள் கசிந்த இரத்த ஊற்று
முடிவிலாது பொங்கி வழிந்து
இரத்த ஆறாக பெருக்கெடுத்தோடி
என் செல்வங்கள் அனைத்தையும்
ஒரே வீச்சில் அடித்துச் செல்கிறது

எனது மெல்லிய உடையால் மூடப்பட்டநிலையில்
மாசிலா ரத்தினங்களை
எனது சிம்மாசனத்தில் பதிக்க விழைகிறேன்
அவன் சில நேரங்களில் பிச்சைக்காரன்
சிலநேரங்களில் நாடு கடத்தப்பட்டவன்

Digitized by PPRACHIN, SOA

சில நேரங்களில் அரசருக்கெல்லாம் அரசன்
இப்போது மறுபடியும் தியானத்தில் தொலைந்த ஞானி
என் சிம்மாசனத்துக்கருகில் நின்று
எனக்காகக் காத்திருக்கிறான்

நான் அதீத கருமி
பெரும் வள்ளலும்
நானே பிரச்சினை தீர்வு இரண்டும் இணைந்த ஒன்று

எனது வேதனையின் ரணத்திலிருந்து
பெருகி குருதியாய் வழியும்
எல்லையில்லா பேரின்பம் போன்று
நான் விலையுயர்ந்தவள்
நான் முழுமையான அவதாரம்
உண்மையான துக்கத்தின் பரிசுத்தமும்
நான் காதலி
முதன்மையான இணையில்லாத
பெரும் அழிப்பவனான காலத்துக்கே
சவால்விடுபவள்

என்னுடைய ஒவ்வொரு உச்சரிப்பால்
என்னுடைய கடைக்கண் பார்வைகளால்
எனது சிரிப்பால் எனது தோரணையால்
எனது காதலால்
எனது மகிழ்ச்சியால்
எனது துளைக்கவியலாத மௌனத்தால்
எனது எரியும் கோபத்தால்
இன்னும்
எனது மிருகத்தனமான பொறாமையாலும்
கவிஞர்களின் கவிஞன் பிறந்தாகிவிட்டது

Digitized by PPRACHIN, SOA

2
பயமுறுத்தும் வானவில்

பலத்த மழை
விழிகளைப் பறிக்கும் நெருப்பின் கோடுகளை
விண் முழுக்க வரைந்து
மண்ணில் வேர்களின் கிளைகளைப் பரப்பி
ஒரு மேகத்திலிருந்து இன்னொரு மேகத்துக்கு
நடனமிட ஆரம்பித்தது மின்னல்

குதிரையின் குளம்பொலி
கீழும் மேலும் எதிரொலிக்க
யானை தன்னுடைய தும்பிக்கையை உயர்த்தி
பொழிகிறது நீர்த்தாரையாய்
மழையின் ரகசியம்
முழுவனத்திலும் பரவுகிறது
கட்டுப்படுத்தவியலாது பொழிகிறது
பெரும் நீர்வீழ்ச்சியாய்

உடன் அமைதியில் ஆழ்ந்தது குளம்பொலி
யாரோ இமைத்திடும் நொடியில்
தூர தூர செல்வதாய்
யானை களைத்து ஓய்ந்து விழுந்து
உறங்கியது காட்டுப் புல்லில்
மழைநீர் ஓடியது பெரும் நீரோட்டமாய்

Digitized by PPRACHIN, SOA

மழைநீரில் எண்ணற்ற
நீர்க்குமிழிகள் ஓடின
ஒவ்வொரு நீர்க்குமிழியும்
ஆயிரக்கணக்கில் தெறிக்கும் வானவில்லின் பிம்பம்
ஏந்திச் செல்கிறது
கிளைகளும் இலைகளும்
இடைவிடாது ஓடும் நீருடன் பேசிக்கொண்டிருந்தன

ரகசியமாய் அவை பேசின
'பார் தேர்ந்த வில்லாளி
தன்னுடைய வண்ணம் தோய்ந்த அம்பெடுத்து
அருகிலுள்ள மலையின் மறு பக்கத்தில் வைத்து
தூரத்து மலையுடன் இணைக்கிறான்'

இந்த வானவில்லின் இருப்பு விநோதமானது
நிலையில்லாத மழைத்துளியில்
நிலையாக அழகாய் அமர்ந்திருக்கிறது
எப்போதும் கீழ்நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது
உன்னைப்போலவே
உன்னைப்போலவே
உண்மையின் சாறான
காலம் இடம் நிகழ்வுகள் மாறிக்கொண்டிருக்கின்றன
சரியாக அனைத்துக்கும் நடுவில்
அனைத்தையும் சூழ்ந்து
நீ அசையாது அமர்ந்திருக்கிறாய்
மாயையின் வலையைப்போல
அதில் நீ என்னையும் பிணைத்து
வண்ணங்களையும் வண்ணமின்மையையும்
பிரக்ஞை எனும் தளத்தில் சேர்த்து
மிகவும் அன்பான மிகவும் திடமான மிகவும் நெருக்கமான
ஒரு உருவை வரைகிறாய்

Digitized by PPRACHIN, SOA

3
தொலைத்த கணங்கள்

இப்பொழுது காலம் கடந்துவிட்டது
விவரமில்லா வெட்டிப் பேச்சுகளில் மூழ்கி
அற்பமானவைகளைப் பற்றிக் கொண்டு
வாழ்நாட்களை நான் வீணாக்கிவிட்டேன்

நான் அறியாமலேயே நீலமும் சிகப்புமான துப்பட்டா
என் தோள்களிலிருந்து நழுவி விட்டது
இன்று எனது இதயம்
புதுவண்ணத்தில் அலங்கரித்துக்கொண்டு
இசை அலைகளாக சிதறிக்கொண்டிருக்கிறது

முழுவானும் அதற்குள் ஒளிமங்கிய அந்திமாலையின் தோற்றத்தை
உடுத்திக் கொண்டது
ஒரு வேளை நேரம் முடிந்துவிட்டதெனச் சொல்கிறதோ
தயவுசெய்து ஒரு சொல்லை ரகசியமாகச் சொல் என் அன்பே
ஒரு முறை என்னைப்பார் ஒரே ஒரு முறையேனும்
என் உள்ளங்கைகளை ஈரமாக்கிக் கொண்டிருக்கும்
அழிவற்ற நறுமணத்தைக் கொண்ட
என் பிரார்த்தனையான
வெண்தாமரையை ஏற்றுக்கொள்

அனைத்தையும் சொல்லவேண்டிய நேரம் இது
பலபிறவிகளாய் என்னைத் தொந்தரவு செய்துவரும்

Digitized by PPRACHIN, SOA

எனது தாகத்தைத் தணித்துக் கொள்ள
எனது ஆழ்ந்த அன்பினை
உனக்கு சமர்ப்பிக்க வேண்டும்
என்னுள் இருக்கும் கண்ணீர்த்துளிகள்
ஸ்படிகங்களாக வளரும் நேரம் இது

பாவம் காலம்
அதனால் எதையும் மறைத்துவைக்க முடியவில்லை
குரலையோ குணத்தையோ
அவன்
மறைக்கப்பட்ட தனது முகத்தை மறைத்துக்கொள்கிறான்
அவமானம் சந்தேகம் என்னும் நிழலால்
விரிந்த வானத்தில் விரைகிறான்
ஜெட் விமானத்தின் புகைபோல
ஒரு கணம் நிற்கக்கூட அவனுக்கு சக்தியில்லை

பார் பார்
மீதமிருக்கும் மணித்துளிகள் நிலையற்றவை
கிளையில் இருக்கும் மஞ்சள் இலைகளைப்போல
மலைமுகட்டில் விரைந்தோடும் சூரிய ஒளிக்கற்றைபோல
என் குரல்வளையின் நாண்களைப் பார்
ஒரு வார்த்தை சொல்ல
எப்படி நடுங்கிக்கொண்டிருக்கின்றன

முடிவற்ற சொற்களஞ்சியம்
இன்றேனும் ஒரு முறை திறக்கலாம்
ஒருவேளை நான்
அந்த ஒரு கச்சிதமான சொல்லைத் தேர்ந்தெடுப்பேன்
என்னுடைய முடப்படாத ஆன்மாவிலிருந்து
முடப்படாத மண்ணின் மார்பகங்கள்
உயிர்துடிப்பின் அமரத்துவத்தை சமர்ப்பிப்பதைப்போல.

Digitized by PPRACHIN, SOA

4
சரியாக மையத்தில்

என் வாழ்க்கை சுழல்கிறது
பிறப்பு இளமை
வயோதிகம் இறப்பு எனும் சுழற்சியில்
எனது உடலை மாற்றிக் கொள்கிறேன்
நேற்று அணிவித்த மாலையினை நீக்கி
புதியதை பூஜைக்கென கடவுளுக்கு சூட்டுவதாய்
முடிவே இல்லாது இதை மறுபடியும் செய்கிறேன்
என்னுடைய விருப்பங்கள் கனவுகள் என்னென்ன
அவைகளுடைய இயல்பு இயல்பற்றது என்ன என்பதைக்காட்டி

வெறுமையை நெருங்கும் முயற்சியில்
உனக்காகக் காத்திருக்கிறேன்
ஆனந்தக்கண்ணீரின் வெள்ளத்தில் உன்னைப் பெற்றவுடன்
உன்னை இழந்தேன் எல்லையில்லா வெறுமையில்
இதுவே என்னுடைய முழுமையான அநுபவம்
நான் இப்போது நிரந்தரமானவளானேன்
அலைகிறேன் சுற்றிலும் காலத்தைக் கடந்தும்

யாரது அங்கே மையத்தில்
யார் அந்த ஒளிமின்னலாய் வருவது
போய்க்கொண்டும் வந்துகொண்டும் இப்போதும் மறுபடியும்
நீ அந்த நடுவில் சரியாக பொருந்தியிருக்கிறாயா
வட்டவெளிக்கோட்டிலிருந்து ஆரத்துக்கு
எப்போதும் அசையாத மையத்தில்..

Digitized by PPRACHIN, SOA

5
சொற்களின் மந்திரவாதி

சொற்களின் மந்திரவாதியா நீ
அழிப்பவனா மரணமா
எப்படி அறிவேன்
உன்னுடைய கேள்விக்கு என்றும் பதிலில்லை
அச்சொற்கள் மிதந்துகொண்டிருக்கின்றன
இந்த விசித்திரப் பாதையில்

எவ்விதம் அறிவேன்
அவை அன்பால் அலங்கரிக்கப்பட்ட
அருமையான காதலனிடமிருந்து
வெகுவேகமாய் வெளிவந்ததென
என் இதழ்களின் வாசல்படியில்
திடீரென நடுங்கிக்கொண்டு
அழுகையுடன் நின்றுவிட்டதென
இருந்தும் சம்பந்தமேயின்றி குழப்பத்தில் சிவந்து
அவை மரமாகவோ பறவையாகவோ மாறிவிட்டன

இன்றும்கூட வானத்தை அலங்கரிக்கிறேன்
பலவண்ண வார்த்தைகளின் வலையால்
நான் விரும்புகையில் அவற்றை விடுவித்துவிடுகிறேன்
நான் சொற்களை அதன் சிறகுகளில் வைக்கிறேன்
பன்முகப்பட்ட அனுபவங்களுடன்
எல்லைக்கு அப்பாற்பட்ட வெளியைக் கடந்த தூரத்தில்

Digitized by PPRACHIN, SOA

உன்னிடமிருந்து ஒரு கேள்வி
என் விழிப்புணர்வின் கதவைத் தட்டியபோது
என்னால் சிருஷ்டிக்கப்பட்ட சொற்களின்
அர்த்தமின்மையை அறிந்துகொண்டேன்
உபயோகமற்ற உணர்விழந்த வார்த்தைகளை
தந்திரமான உலகில் மறைத்துக் கொள்ளவும்

நல்லது. எவ்விதம் நான் கடப்பேன்
இந்த முழுமையான மௌனச் சொற்களை
உன் கேள்விகளை எதிர்கொண்டு

ஓ! சொற்களைச் சாகடிப்பவனே!
ஓ! என் அன்பே, என்னை ரட்சிக்க வந்தவனே
இன்று எவ்விதம் ஒரு சொல்லை உச்சரிக்க விரும்பினேன்
என்னுடைய மீதி வாழ்க்கையை வியாபாரமாக்க
அந்தச் சொல்லே சரியான பதிலும்
அதற்குப் பிறகு எந்தச் சொல்லும் தேவையில்லை
இது வாழ்க்கை முழுவதும்
பேச வேண்டுமா வேண்டாமா என்று அழைக்கழித்த
இனிய இரட்டைமனநிலையில்
தடுமாறிய எனது இதயத்தின்
தண்டனையின் வலியினை நிறுத்தும்.

Digitized by PPRACHIN, SOA

6

எங்கே எடுத்துச் செல்கிறாய் என்னை

எங்கே எடுத்துச் செல்கிறாய் என்னை
இங்கே இருக்கிறது எனது குடும்பமும் என் வீடும்
எல்லா கடமைகளும் செய்வதற்கென மீதம் இருக்கின்றன
என்ன கனவு உன்னை மகிழ்வித்தது
என்னை ஆகர்ஷிக்கும்படி
தனியே விடு என்னை

இரத்தநாளங்களில் ஓடும்
உன்னுடைய கனவு என்னுடையது
ஆனால், சொல்
எந்த வெற்றுச் சிம்மாசனத்தில்
நீ என்னை அமர்விக்கப்போகிறாய்
உலகின் கடைசிப் புள்ளியைக் கடந்து
என்னைத் தூக்கிச் சென்று

இங்கே இதயத்தின் அடியாழத்தில்
முடிவிலா கண்ணீர் பெருகி ஓடுகிறது காட்டு நீர்வீழ்ச்சியாய்
நீ அந்த இனக்கவர்ச்சி
வண்ணமயமான தூரசியின் துகள்கள்
எந்தக் காலப்புள்ளியில் உன்னைச் சந்திப்பேன்
என்னை என்னிடமிருந்து பிரித்தெடுக்க

Digitized by PPRACHIN, SOA

இங்கே இது நடக்காது
எந்த அறிந்த காலத்தின் புள்ளியிலும்
உன்னைச் சந்திப்பதென்பது
நன்றாகத் தெரிந்த பின்பும் எப்படி வெளியே வந்தேன்
எனது வீட்டை விட்டு உன்னுடன் ஓடிச் செல்ல

எனது ஒவ்வொரு கனவும்
தூரத்துப் பள்ளத்தாக்கின் நடுப்பகுதியில் இருக்கும்
மெல்லிய மரத்தளிர்
நான் பூமியில் அவற்றின் பெயர்களை எழுதுகிறேன்
மென்மையாய் அன்புடன் வருடுகிறேன்
என் கனவுகள் என் தொடுகையில் கிளர்ந்து நனவாகும் என
எனக்குள் நம்புகிறேன்
எனதுடலின் உணர்வெனும் நரம்புகள் அதிர்கின்றன
இசையாய் காற்றில்
சொல், எப்போது அலையாய் இவ்விசை
தன் சிறகுகளை விரித்து உன் இதயத்தைத் தீண்டும்?
எத்தனை கண்ணீர் மழையுடன்?

எத்தனைகாலம் எழுதுவேன் எனது பாடலை
எழுத்தில்லா மொழியில்
நூற்றுக்கணக்கான வருடங்கள் நான் ஏன் பிணைக்கிறேன்
எனது வேர்களை அந்த மரத்தில்
நான் ஏன் வெளிநடந்தேன் உன்னுடன்
அனைத்தையும் புறக்கணித்து
ஏன் நான் தனியே இவ்விதம் நடுங்குகிறேன்?
புல்லின் இலைப்பரப்பு தனிவயலில் படபடப்பதாய்
ஏன் நான் வழியும் என்னுடைய ரத்தத்தையே சுவைக்கிறேன்?
இருந்தும்

Digitized by PPRACHIN, SOA

நீ என் கரங்களைப் பற்றுகையில்
இந்த உலகை மீறிக் குதிக்கிறேன்
உன்னுடன் வந்துவிடத் தயாராகி.

Digitized by PPRACHIN, SOA

7

வெறுமையின் சக்ரவர்த்தினி

கடைசியில் அவர்கள் சென்றனர்
வாழ்வின் கடைசித் தேவையை உணர்ந்த பின்பு

மங்கிய மாலையைப்போல
தூரத்து தொடுவானுக்குப் பிரிவைச் சொல்லி
ஒரு கையை அசைத்தேன்
இன்னொரு கையால் என் இருப்பினை தூசியில் இருந்து
அழியாமல் காத்தேன்

சில நேரம் கழிந்த பின்
என் பின்னலிலிருந்து மலர்கள் விழும்
என் முகம் இருளில் உருகும்
எவரும் இல்லாதபோது
எனக்குள் ஒலிக்கும் ஒரு குரல் கேட்கும்
குற்றம் கண்டு பிடிப்பதுபோல்

அவர்கள் அன்புள்ள ஆண்களா
அல்லது வெறும் சதை கேட்கும் 'ஷைலாக்'குகளா
எப்படி நான் யாரோ ஒருவரின் கண்களுக்குள் சிறைப்பட்டேன்
எப்படி ஒரு வண்ணம் பூசிய வண்ணத்துப்பூச்சி
பறந்து சென்றது
எனது கனவுகளின் மென்மையானதொரு மரத்திலிருந்து

Digitized by PPRACHIN, SOA

எனக்குத் தெரியவில்லை
எவற்றால் நான் செய்யப்பட்டிருக்கிறேன் என்று
நான் இருண்ட குளிர்காலத்தின் மூடுபனி போல் இருக்கிறேன்
நான் அழுகிறேன் சிரிக்கிறேன்
யாருக்கும் தெரியாது
என் வாழ்வினை எப்படிக் கழித்தேனென்று
முணுமுணுக்கிறேன் ஒரு மொழியில்
அட்சரங்கள் இன்றி ஒலிகள் இன்றி

அவை என்னை அடைத்துவைக்க விரும்புகின்றன
இருளின் தனியான மூலையில்
கடவுளுக்கு மட்டுமே தெரியும்
வாழ்வின் உடைந்த பகுதிகளை எவ்விதம் சேகரித்து
நான் உயிரோடிருக்கிறேனென்று
இங்கே வா என்னிடம்
எனது தொலைந்த நிலையைத் திரும்பப் பெறுவதில்
வெற்றி பெற்றவள் நான்

மகிழ்ச்சியான பறவைகள் தங்கள் கூடுகளுக்குத்
திரும்பிச் செல்கின்றன வானில் ஒரு வரிசையில்
காண்பதற்கு சிலுவை போலத் தெரிகின்றன
காற்று முழுக்க எங்கெங்கிலும் துடிக்கும் பரவசம்
புல்லின் இலையில் பாதுகாக்கிறது
உள்ளே பூமியின் பிளவினில் மறைந்துள்ள
ஒரு மழைத்துளி

மௌனமாய் எனது ஆழங்காணமுடியாத
நம்பிக்கையின்மைக்குத் திரும்பவேண்டும் நான்
நீ அறிவாயா அன்பே
நான் அனைத்தையும் இங்கே விட்டுச் செல்ல வேண்டும்.

Digitized by PPRACHIN, SOA

8
இறுதியான துரதிர்ஷ்டம்

எவ்விதம் நாம் பிரிந்தோம்
உன் உருவம் என் ஆன்மாவில்
பச்சை குத்தப்பட்டிருக்கையில்
உன் பிம்பம் என் இதயத்தில் உறைந்திருக்கையில்
உன் நிழல் என் உடலில் நிறைந்திருக்கையில்

இன்று என்னுடைய அதிர்ஷ்டத்தை விலகச் சொன்னேன்
இது நான் தனியாக இருக்கவேண்டிய தருணமென்று
கவனிக்கும் காலத்தை
ஒரு பக்கம் தள்ளச் சொன்னேன் - காத்திரு
நமது சந்திப்பின் முடிவில் எதிர்க்கப்போவதில்லை

ஆனால்
எங்கே பகலும் இரவும் இல்லையோ
இருளும் ஒளியும் இல்லையோ
இன்றும் நாளையும் இல்லையோ
இந்த முடிவிலியை நாம் அளப்போம்
இது புது இணைவு
களைப்பில்லா வண்டுகளின் தீராத கவனத்தைக்கோரும்
நீலத்தாமரை வெண்தாமரை செந்தாமரையென
சூரியனை விரும்பும் என்னுடைய உடலின்
ஒவ்வொரு அணுவும் முடிவிலாது மலர

Digitized by PPRACHIN, SOA

பூமி இனிய நறுமணத்தால் நிறைந்தது
முழு விண்ணும் அமைதியான அழைப்பால் அதிர்கிறது
எனது முழு இயல்பும் எழுந்து வினவியது அது யாரால் என

அவ்வளவாய் பரிச்சயமில்லாத
அன்பும் நம்பிக்கையில்லாத
அனிச்சையாய் விழிகளின் சந்திப்பு
அரைகுறையாய் இதழ்கள் உச்சரித்த பாடல்
பாதி மறைக்கப்பட்ட நுண்மையான சிலை
நீ தீண்டிய கணத்தில் துளித்துளியாய் சிதறுண்டது

பூமி என்னைத் தனித்து அழைத்து கேட்டது
நீ என்ன பைத்தியமா
எங்கிருந்து கற்றாய்
விதியையும் காலத்தையும் கடந்து
விடுதலையாகி உயர்வு பெற

உண்மையிலேயே நீ கடமையிலிருந்து விடுபட்டாயா
இன்றிலிருந்து
உலக வாழ்க்கையிலிருந்தும்?
விதியை உன் கட்டுக்குள் கொண்டுவந்தாயா அல்லது
உன்னுடைய விதியை அனைத்து குற்றம் சாட்டுதல்களிலிருந்தும்
விடுவித்தாயா
இவ்வுலகில் காலத்தின் அழிவுகளில்
தீண்டப்படாதவளாகக் கிடப்பாயா

நான் இதையெல்லாம் கவனிக்கப்போவதில்லை
நான் அறிவேன்
கேள்வி கேட்பவனுக்கும் இது தெரியாது
எவ்வழியை அறிந்து

Digitized by PPRACHIN, SOA

உன்னை
இதுவரையில் சகித்துக்கொண்டேனென்று
அவனுடைய பாதையில் அதீத சூரிய ஒளி
அவன்
என்னைப் போல குளிர்ந்த இருள் நிறைந்த வாழ்க்கையை
என்றும் இருளில் தேடிக்கொண்டிருக்கவில்லை.

Digitized by PPRACHIN, SOA

9
இடி போன்ற அணைப்பு

எத்தனை பிரகாசம் இந்த ஒளி
என்னுள்ளிருந்து மலர்ந்து பிரகாசிக்கிறது
அந்த புனிதத்திலிருந்து
நான் முழுமையான ஒளிவெள்ளமானேன்

எவ்விதம் நான் விவரிப்பேன்
எனது பரவசத்தின் விபரங்களையும்
எனது கற்பனையின் வர்ணங்களையும்
எவ்விதம் வாழ்வேன்
இந்த விரிந்த பேரொளியின் பிரகாசத்துடன்
கணக்குப் பார்க்கும் குறுகிய உள்ளம் கொண்ட உலகில்
வானம் ஒரு அங்குல அளவில்தான் தூரம் எனக்கு
எனது முடிசூடலுக்கு
வாழ்த்துகளைப் பொழிந்து கொண்டிருக்கிறது

மெதுவாக என்னுடைய இருப்பின்
பிரகாச நெருப்பு பறந்துகொண்டிருக்கிறது
எல்லையில்லா வெறுமைக்குள்

இருந்தும் இதென்ன பயங்கர நிழல்
என்னுடன் நடந்துகொண்டிருக்கிறது
முழு இருப்பை அச்சுறுத்திக்கொண்டு
புல்லின் பச்சை முகம் வெளிறுகிறது

Digitized by PPRACHIN, SOA

நெல்வயலில் தேங்கியுள்ள நீர்
சோகமாகக் கண்ணீர் நிறைந்த கண்களைப்போல் காட்சியளிக்கிறது

இந்த பயங்கர நிழல் நதியின் அலைகளை உலுக்குகிறது
கடலை நடுங்கச் செய்கிறது தனது கர்வத்தால்
பின்பு தொடுவானை அடைந்து
குதித்து வானுக்குச் சென்றுவிடுகிறது

ஒளியின் அலை மகிழ்கிறது புளகாங்கிதமடைந்து
ஏன் இந்த நீண்ட நிழல்
பாம்பைப் போல நாக்கினை நீட்டுகிறது

பயத்தில் நடுங்கியபடி
உன்னை நினைவில் வைத்து
மண்ணையும் விண்ணையும் கேட்கிறேன்
யார் அழிவற்றவர்
எது உண்மை
எது என்னுடைய உண்மையான அடையாளம்
சொல்,
இந்த பிரகாச ஒளியா அல்லது பயமுறுத்தும் நிழலா?

என்னுடைய இருப்பின் ஒளிமயமான மேடையில்
ஏன் இந்த நிழல் கர்ஜிக்கிறது
ஏன் இது இறந்து விழவில்லை
வேறெங்கிருந்தோ மென்மையாக பதில் வருகிறது
ஆனால் கொடூரமாக
இது உன் குரலா அல்லது விண்ணின் குரலா

Digitized by PPRACHIN, SOA

ஒளியின் ரத்தினங்களிலிருந்து செய்யப்பட்டுள்ளாய்.
என் அன்பே!
இப்போது சொல்
நீ ஒளியால் மட்டும் செய்யப்பட்டுள்ளாயா?
இருளாலில்லையா?
இந்த ஒளியும்
இந்த இருளும்
என்னுடைய இரு கரங்கள்
இவை உன்னைச் சுற்றி முடிவிலாது தழுவட்டும்.

Digitized by PPRACHIN, SOA

10
ஏரி

புதுவித ஏதோ ஒரு கவனத்தில்
நான் எனது இலக்கை மறந்துவிட்டேன்
நான் ஆகாயத்துக்கு அளித்த வாக்கை மறந்துவிட்டேன்
தங்கமாட்டேனெனும் வாக்கை மலைகளுக்கு
எனக்கு எப்படித் தெரியும்
உறைந்த கடல்போல் இங்கே நீ நின்றிருப்பாய் என்று
நீல சக்ரவர்த்தியாய் உன்னுடைய அடர்ந்த ஆசைகளுடன்
நீ ஞானியைப்போல் தோற்றமளிக்கிறாய்
அதேசமயம் அமைதியின்றியும்
உனது மூடப்படாத உள்ளங்கையின் அலறும் நீரில்
யாருடைய பிம்பம் பார்த்து
உன்னையே நீ மறந்தாய்

மதிய சூரிய ஒளி இலைகளிலும் புல்லிலும் கூடுகட்டும்
எனது மார்பகங்கள் மஞ்சள் நீரால் நனையும்
உனது பொன் உடல்
மதிய சூரிய ஒளியாய் மின்னுகிறது

மீண்டும் எனது அடையாளத்தை நான் மறக்கலாம்
உனது ஆசையின் எதிரொலியாய் மாறி
நான் இறந்துகொண்டிருப்பேன் மறுபடி உயிரெழுவேன்

Digitized by PPRACHIN, SOA

முன்பு என் கனவுகளில் நீ வந்தாய்
மொத்தமாய் சேர்ந்த பல வாழ்க்கைகளின் வலிகளில்
நான் ஞானக்குகைகளில்
புகையின்றி எரிந்துகொண்டிருந்த பொழுது

அவை பழங்கனவுகளல்ல
எப்போதும் புதியவை
எப்போதும் புதுப்புனல் தேடும்
உன்னுடைய தாகத்தைப்போல
மீண்டும் நதியைக் கடக்கும் உன்னுடைய விருப்பம்
எனக்கு முற்றிலும் புதியது
நான் 'பிருபா' நீரோட்டமா அல்லது 'மஹாநதி'யின் படுகையா
நான் உள்ளே உன்னை அழைக்கிறேன்
ஆனால் எங்கே எனது கரையைக் கடக்கும்
கடுமையான புதுவெள்ளம்

வெறும் கேள்விகளே எனது நீரோட்டத்தில்
அத்தகைய கேள்விகளின் அலைகள்
தங்களுடைய தலைகளை உடைத்துக்கொள்கின்றன
உனது பாதி மூடிய வேறுபட்ட இதழ்களின் எதிரே

உனது பதில்கள் கனமான இரகசியப் பேச்சுகள்
அடர்ந்த சந்திரனின் கற்றைகளில் தொலைந்தவை
நான் எதையும் கேட்கவில்லை
உடன் நான் என் வாழ்க்கையின் பின்னால் திரும்பினேன்
அழுகிய, இறப்புடன் கூடிய கிரீடத்துடன்
அது ஸ்திரமாய் அமர்ந்திருந்தது

உனக்கு நான் படகானேன்
படகோட்டும் பெண்ணுமானேன்
காட்டு நீரோட்டமானேன்

Digitized by PPRACHIN, SOA

நீரோட்டம் கடக்கும் விதமுமானேன்
சரியாக அந்த நொடி
நான் முழுமையாக
இறந்த, எதிர்காலங்களை முற்றிலும் மறந்தேன்
எங்கே பூமி, எங்கே படகு
எங்கே ஏரி, எங்கே பயணி
முழுவாழ்வும் நான் ஒன்றே என நான் உணர்ந்தேன்
அன்பான மார்பகங்கள் காதலுக்கென திறந்தன
நான் உனது உணர்வுகளுக்கு முழு இலக்காகி விட்டேன்
அறியாத தேசத்தில் தொலைந்துவிட்டேன்
லட்சோப லட்சம் நட்சத்திரங்களால் சூழப்பட்டிருந்தேன்
பிரபஞ்சவெளியின் விளக்குகளாலும்
பிரபஞ்ச இருளாலும் அழிக்கப்பட்டேன்

பின்பு அடர்ந்த நறுமணமானேன்
இனிய பாடலின் அலையானேன்
முழு பிரபஞ்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தேன்
அல்லது இக்கரையிலிருந்து
தெரியாததை இணைக்கும் அந்தப் புதிய பாலமானேன்
முழு பிரபஞ்சத்தின் வெறுமை
சிறுபுள்ளியாய் மாறியதைப் போல
பரவசமானது என்னுடைய இதயத்தைத் துளைத்து நுழைந்தது

உன்னுடைய அனைத்து ஆசைகளும் நிறைவேறியபின்
நான் மீண்டும் அவலட்சணமாய் அழிவில் விடப்பட்டேன்
கொண்டாட்டங்கள் முடிந்த பின்பான இடத்தைப் போல
எனது நீண்ட உடலை தனியே இழுத்துச் செல்வேன்
தனிமையின் இருண்ட மூலைக்கு

Digitized by PPRACHIN, SOA

அந்த தனிமைக்குள்
சில சமயங்களில் உனது குரலின் எதிரொலி
என் இதயத்தைக் கிழிக்கும்
நம்பிக்கையின்மையெனும் இடியைப்போல.

Digitized by PPRACHIN, SOA

11
அதிகாலையில்

அதிகாலையில் யாரோ அழைத்தார் என்னை
யாருடைய அன்பான வருகை
உயிர்க்காற்றுடன் நிறைந்தது என் முற்றத்தில்

பொன் இசைக்கருவியான என் இதயம்
அதிர்கிறது இனிய இசையால்
கடல் இருளில் கதறிக்கொண்டிருந்தது
நான் கரையின் எல்லையின்மையால் சூழப்பட்டிருந்தேன்
முழுவானும் அலையும் கருமேகங்களால் நிறைந்தது
மழை பொழிவேனென பயமுறுத்திக்கொண்டு

நான் இழுக்கப்படுகிறேன்
ரகசிய மாய சக்தியின்மையால் ஈர்க்கப்படுகிறேன்
வெறுமைப் படுக்கை நறுமணத்தால் நிறைய ஆரம்பிக்கிறது
யாரோ ஒருவரின் சுவாசத்தால் குரலால்

உனது விரல்கள் ஆயிரம் தாமரைகளின் இதழ்களாய்
எனது உடலின் அனைத்து அணுக்களிலும்
கரைந்து கலந்துவிட்டன.

Digitized by PPRACHIN, SOA

12
நிலவின் ஒளிக்கற்றைகள் - குட்டை

நான் சகதியும் அழுக்கும் நிறைந்த
சிக்கலாக சுழன்று செல்லும் பாதையில்
விலக்கப்பட்ட பொருள்களால் சூழப்பட்ட குட்டை
முழங்காலளவு ஆழ்ந்த நீரில்
தவளைகள் நத்தைகள் சிப்பிகள் மீன்குஞ்சுகள் உள்ளன
பித்தேறி நடனமிடும் புதுமையான காற்றால்
எனது மௌனத்தைக் கலைக்க இயலவில்லை

சில நேரங்களில் கொக்கு வரும்
மெல்லிய அடியெடுத்து வைத்து
விழிகளால் நீரின் அடியில் உற்றுப்பார்த்தபடி
நீ அந்த பொழியும் நிலவின் ஒளிக்கற்றை
நீ ஏன் இங்கு வந்தாய்
எனதுடலின் மென்மையான பகுதிகளை
உனது நறுமணமிக்க கரங்களால் சீராட்டுகிறாய்
என்ன மாயத்தால்
ஒளிரும் உன் பிம்பத்தால்
வண்ண ஓவியம் தீட்டிக்கொண்டிருக்கிறாய்
சாதாரணமான என் இதயச்சீலையில்.

Digitized by PPRACHIN, SOA

13

கற்பூர மழை

கற்பூர மழை
இங்கும் அங்கும் எங்கும்
ஏரியில் கடலில்
என் முழு இருப்பும் நறுமணத்தால் நனைந்தது

என் குழல் கற்றை முழுவதும்
என் இதழ்களில்
இதயத்தை மென்மையாய் நிரப்பியபடி
எங்கிருந்தோ யார் பாடிக்கொண்டிருப்பது
மரநிழலில் அமர்ந்தபடி
ரகசியமாய் இசைப்பதாய்

யாருடைய பாடல் இது தூரத்திலும் பரவலாகவும் பரவுகிறது
அதன் எதிரொலி புல்லாங்குழலை அதிர்வுறச் செய்யும்
உன்னுடையதைப்போல.

Digitized by PPRACHIN, SOA

14
தேன்குடம்

கீழ்வானம்
இருள் அதன் உருவிலா கரங்களில்
தேன்குடம் ஏந்தியிருக்கிறது
அதன் துளிகள் மரங்களில் பொழிந்துகொண்டிருக்கின்றன
மரங்களிலிருந்து தரையிலும்

துளித்துளியாய்
பெருமழையாய் பொழிகிறது எனது வீட்டிலும்
வீட்டு முற்றத்திலும்
உலகின் எல்லா இடங்களிலும்
என்னுடைய பரவசத்தின் வலியினை அடித்துச் செல்கிறது
துளித்துளியாய்
முழுமையான தேன் இரவு
முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது

பூமி விடியலுக்கு நகர்கிறது
இலைகளைத் தனது சுவாசத்தால் சலசலக்கச் செய்து
நம் ஓசையற்ற பாதச்சுவடுகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன
எப்போதும் நகர்ந்து செல்லும் வாழ்க்கைக் காலத்தில்.

Digitized by PPRACHIN, SOA

15
சிப்பி

திமிங்கலங்களின் துரத்தல்களிலிருந்து
என்னைக் காப்பாற்றிக்கொள்ள
நிர்க்கதியாய் அலைகிறேன்
கடலின் ராஜ்ஜியத்தில்

கடலின் முடிவில்
ஒற்றை நட்சத்திரம் புலப்பட ஆரம்பித்தது
எண்ணிக்கையிலடங்கா நட்சத்திரங்களின் கூட்டத்திலிருந்து
தனியே ஏன் அந்த ஒன்று என்னை உற்றுப் பார்க்கிறது
தந்திரமாய் ஒன்றுமில்லாததை நான் என்னுடைய அந்தரங்கமானதாய் கருதுகிறேன்
என் மௌனப்பிரார்த்தனைகளை
என் இதயத்திலிருந்து அளிக்கிறேன்
கடலின் ஆழத்திலிருந்து கேட்கிறேன் நான்
என்னை வரச் சொல்லி அழைக்கும் குரலினை
என்னுள்ளான வானத்தில் பார்த்தால்
மின்னல் நடனமிடுகிறது
என் சிறு இதயம் விழித்துக்கொள்ள ஆரம்பிக்கிறது

பெருகும் பேரின்பத்தை உருவாக்கும் துளிகள்
தூரத்து வானத்திலிருந்து பொழிகிறது
வெறுமை அதிர்ந்து கொண்டிருந்தது
சொர்க்கத்தின் பூமி பரவசத்தால் நிறைந்துள்ளது

Digitized by PPRACHIN, SOA

கடல் முழுக்க அழுத்தமாய்
'ஓம்' எனும் உச்சரிப்பில்

முடிவில்
புனிதத்தின் ஒரு துளி
காத்திருக்கும் என் இதழ்களில் விழுகிறது
காதலின் பச்சை வனத்தில்
அந்த கணத்தின் பரவசத்தில்
நான் முழு இளமையுடன் மலர்கிறேன்
கருத்தரிக்கிறேன் தாய்மையாக.

Digitized by PPRACHIN, SOA

16

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத

எனது பொன்மேனி பகலின் சூரியஒளி
பூமியில் வெடித்து வெளிப்படுவதுபோல் இருந்தது
உனது காதல் தூயதெனில் ஏன் இத்தனை அச்சம்?

எனது உடலின் ஒவ்வொரு அணுவும்
நடுங்கிக் கொண்டிருக்கிறது
பாதி காதலினாலும் பாதி பயத்தினாலும்
எந்த மாயச்சரடு கட்டுகிறது பிரிக்கிறது

நம்மிடையே எதுவுமே இல்லையெனில்
நீயும் நானும் தவிர எவரும் இல்லையெனில்
நான் யாருக்கு அஞ்ச வேண்டும்
பகலிலும் இரவிலும்
எங்கிருந்து இந்த எலும்பைத் துளைக்கும் பயம்
வந்து இதயத்தை உறையச் செய்கிறது

அந்த அச்சம் என் கண்களின் முன்
உன் வருகை இல்லாத கொடூரமான நாட்களை
வரைந்து கொண்டது
சூரியன் சந்திரன் மேகங்கள் காற்று
தங்களுடைய இயல்பான நிலையில் இருக்க
நான் முடிவிலா வெற்றுவெளியில்
என்னால் இழுத்துச் செல்லப்பட்டேன்

Digitized by PPRACHIN, SOA

ஒளிரும் மின்னலையோ வானவில்லையோ காணாது
காற்றின் சுழற்சியைத் தவிர்த்து
நம்பிக்கையை நோக்கி இழுத்துச் செல்லப்படாமல்
முகத்தை மறைத்துக்கொண்டு இல்லை என்றேன்
உன்னுடைய அணைப்பில் இருந்தபோதும்
என்னுடைய நானில்லா நிலை
என்னுள் உறுமிக் கொண்டிருந்தது

தொடுவானில் எவருடைய வெற்றுக்கரங்கள்
வெறுமையைக் கோபம்கொள்ளச் செய்து
இல்லை என ஒலிக்கச் செய்தது
தொலையும் பயமோ தொலைத்தலின் பயமோ
களிமண்ணால் செய்யப்பட்ட உலகத்தின் உள்ளிருந்து
என் இரத்தத்தில் பெரும் கோபம்
விசையுடன் எழும்
எனது பசிக்கான அழுகை எனது வெறுமை
என் கடைசி உரிமையைக் கேட்கவேண்டுமா
எல்லையிலிருந்து

எப்படி நான் காரணமில்லா பயத்திலிருந்து வெளிவருவேன்
தொடரும் தோல்விகளை உடைத்துக்கொண்டு
பயத்தால் முற்றிலும் இறந்தநிலையிலிருந்து
வாழ்க்கை முழுதும் வாழ்க்கையிலிருந்து காலிசெய்து
உனது சந்தனமரம் போன்ற தேகத்தை
நான் பாம்பினைப்போல் சுற்றி
அந்தரங்கமாய் அணைத்திருப்பேன்
அந்த அணைப்பில்
எனது இருப்பை மறக்க விரும்புகிறேன்
எனது பலவீனத்தையும்

Digitized by PPRACHIN, SOA

உனது விருப்பத்துக்குரியவளாக இருக்க இயலாததையும்
என்னுடைய தாகம் கொண்ட மணற்கரங்களில்
நீ எப்போதும்
புது நீரோட்டமாய் இருக்கிறாய் என் அன்பே
நான் உறுதி அளிக்கிறேன்
உன்னை என் அணைப்பில்
எப்போதும் வைத்திருப்பேன்

***

யாருடைய குரல் யாருடைய நிழல்
யார் பிரிவுக்கென கையசைத்தது யாருக்கு
யார் யாரை விட்டுப் பிரிந்து சென்றது
உடைந்த கண்ணாடியில் தெரியும்
தெளிவில்லா பிம்பமாய்

பழைய இடிந்த அரண்மனையிலிருந்து
ஒலிக்கும் எதிரொலியாய்
இதென்ன மாய வட்டம்
நீ என்னை அனுமதிக்கவில்லை
உன்னிடமிருந்து பிரிந்து செல்ல

நீ நிர்வாணமாயிருந்தபோது
நீ என்னை இழுத்துச் சென்றாய்
நிர்வாண தொடுவானத்திற்கு
நான் குழம்பி நின்றேன்
நீ பூமியாகவும் வானாகவும்
மாறத்தொடங்கினாய்
நீராகவும் நெருப்பாகவும்
பரவசத்தின் நறுமணமாகவும்
சரியாக அக் கணம்
ஓர் புது அனுபவம் பிறந்தது

Digitized by PPRACHIN, SOA

எனது உதிரத்தில்
அதற்கு உருவுமில்லை
அது களைப்படையவும் இல்லை
அந்தப் பரவச நிலையில்
உன்னுடைய தொலைதூரத்தின்
அருகினை இறுகப்பற்றிக்கொண்டு
உனது உருவமின்மையை ஆராதிக்கிறேன்.

Digitized by PPRACHIN, SOA

17
தப்பி ஓடிப்போனவன்

உன்னால் திரும்பி வரவே முடியாது எப்போதும்
உன் வருகைக்காக வழிமேல் விழிவைத்து
ஒரு காலத்தில் தீபங்களாய் எரிந்த
என் கண்களை நேரடியாய் பார்க்கவும் முடியாது

இந்த சமுதாயமும், சரித்திரமும்
சம்பிரதாயங்களும்
தப்பி ஓடியவனின் வழிமுறைகளை அறியும்
நீ காணாமல் போனபோது
கையசைத்துகூட செல்லவில்லை
நதியில் தெரியும் தொலைந்த நட்சத்திரத்தின் பிம்பம்போல
வரவேற்புக் கதவில் அலங்கரிக்கப்பட்ட மலர்மாலைபோல
எனது நம்பிக்கை உதிர்ந்தது
நம்பிக்கையின் மேல் நம்பிக்கைவைத்து

உனது இதயம் பற்றி எரியும் காட்டுத்தீ போல
இருந்தும் உன்னுடைய இனிய பேச்சுகளின் பின்னால்
எவ்வளவு இனிமையானது உனது பெருமூச்சின் குரல்

காற்றின் அலைகள் எனது தனிமையைச் சுற்றி அலைகின்றன
யாரோ ஒருவருடைய ஏளனம்
எனது இதயத்தைக் கிழிக்கின்றது
எனது உலோகக் கண்களில் உறைகிறது உதிரத்துளிகள்

Digitized by PPRACHIN, SOA

நீ சிறுவனா
ஒளிந்தும் ஒதுக்குகிறாய்
என் கேள்விகளுக்கு பதிலளிக்காமல்
நீ என்ன வேறுவித கடவுளா
எந்த ஒரு படைப்பையும் அழிவில் சேர்க்கிறாய்
உன்னுடைய உருவாக்கும் தருணங்களின்
உள்ளார்ந்த ஆர்வம்
அழிக்கும் காலத்தில் ஆவியாகிவிடுகின்றன
மரங்கள் வேருடன் பிடுங்கப்படுகின்றன மௌனத்தில்
மலைகளும் வானும் பூமியில் விழுகின்றன
ஒருவருக்கும் தெரியாது
ஏன் நான் மட்டும் தனியே
அடர்ந்த மூடுபனியில்
தேடிக்கொண்டிருக்கிறேன்
ஒரு மறையும் நிழலைப்பிடிக்க

மக்கள் தாறுமாறாக ஓடுகின்றனர்
பலி மேடையிலிருந்து
வீட்டிலிருந்தும் குகைகளிலிருந்தும் விடுதலையை விரும்பி
உண்மையிலிருந்து நினைவின் சுமையிலிருந்து
காதலிலிருந்து மற்றும் துயர வாழ்க்கையிலிருந்து
ஆனால்
நீ உன்னிடமிருந்தே ஓடினாய்
உன்னுடைய படைப்பிலிருந்தே விடுபட விரும்பி

ஓ! தப்பி ஓடிப்போனவனே! எங்கிருந்தாலும்
போர்க்களத்திலோ அல்லது பதவியின் இருக்கையிலோ
அல்லது இன்னொரு அழகிய பெண்ணின் தோள்களிலோ
அங்கே முடிவில்லாது மலர்களின் மழை பொழியட்டும்
உனது வாழ்க்கையின் பாதையில்.

Digitized by PPRACHIN, SOA

18
வெந்நிற இருள்

மலையின் அடர்ந்த நிழல்
நடு இரவின் கூட்டுக்குள் நுழையும்போது
மூடிய இறகுகளிலிருந்து
வெம்மையைக் கசியவிடத் தூண்டுகிறது
யாரோ அருகிலிருப்பதுபோல் தோன்றுகிறது
அவன் அங்கே இல்லாதபோதும்

அவன் இருப்பு உடைந்து துகள்களாகியது
அவனுடைய குரல் கரைந்துபோனது
உண்மையிலேயே என்னால் அவனுடைய முழு எளிமையை
நினைவுகூர முடியவில்லை
இது நீயா என்னிடம் திரும்பி வந்துகொண்டிருக்கிறாய்
இடியைப்போல
மௌனமாய்
நடனமிடும் நீரூற்றின் ஒத்திசைவாய்

யாரோ நிறுத்துகின்றான்
உறக்கத்திலிருந்து உலகை எழுப்பும்
மழையில் நனைந்த அவனுடைய கையை நீட்டி
அவளுடைய செவிகளில் கேட்காதவற்றை
ரகசியமாய் பேசுகிறான்

Digitized by PPRACHIN, SOA

என்னுடைய தேகம்
அழுக்கான கால்வாய்போல் அருவருப்பாயுள்ளது
என்னுடைய ஒப்பந்தமில்லா சரணாகதியும் அருவருக்கத்தக்கது
நீ அளித்த சத்தியங்கள்
தொடர்ந்து அழிக்கிறது
என்னுடைய வாழ்நாள் முழுமையின் இருப்பை
ஆம். நான் எனது வாசலைத் திறந்திருக்கிறேன்
உறக்கத்தை விழிகளிலிருந்து துடைத்துவிட்டேன்
எனது கனவுகளை
நடக்காதவற்றுக்கும் அப்பால் நீட்டிவிட்டேன்
நம்பிக்கையின் மேல் நம்பிக்கைவைத்து
ஏதோ ஒன்று என் முன்னே ஒளிரும்
என்னுடைய கடைசிக் கனவின் முடிவில்
வெந்நிற இருளில்.

Digitized by PPRACHIN, SOA

19
எனக்குப் புரியவில்லை

எனக்குப் புரியவில்லை
எது உண்மை
எது உண்மையில்லையென்று
கனவுகளிலிருந்து விழித்ததும் எனது கர்வத்தைத் தேடினேன்
பழக்கமில்லா நிகழ்வுகளில்
இடதுகையில் பயங்கர ஆயுதங்கள் இருந்தும்
பழிவாங்குதலில் பின்வாங்கினேன்

மண்ணுள் இழையோடும் வேர்களைப்போல்
உனது தழுவலில் சிக்கிக்கொண்டேன்
இருந்தும் நான் மண்ணுக்கு
சொந்தமானவளென்று உரிமை கோரவில்லை

முடிவிலா கேள்விகள்
எது சரி
எது சரியில்லையென
தொடர்கூச்சல்கள்
கண்ணீர் திறந்தது மௌனத்தை
ஒளிரும் வாள்போன்ற பேனாவால்
உன்னுடைய வாழ்வின் ஆழத்திலிருந்து
ஒரு பதிலைப்பெற

Digitized by PPRACHIN, SOA

என் முந்தானையிலிருந்து
பூக்களை தூசு போல் தட்டுவேன்
எனது வளையல்களை
குப்பைக்கூடையில் போடுவேன்
எனது வாழ்க்கை ஊற்றின் பசுமையை
எடுத்துவிடுவேன்
இரவிலும் பகலிலும்
ஒரு பதிலைத் தேடுகிறேன்
வெறுமையின் மூலைமுடுக்குகளில் பாய்கிறேன்
விண்மீன் கூட்டங்களை உலுக்குகிறேன்
மேகங்களைத் துரத்துகிறேன்
வந்து என்னைத் தொடவேண்டுமென்று
கடைசியில் வானம்
தடுமாறுகிறது மழையாகிட.

Digitized by PPRACHIN, SOA

20
உருவமிலா சிலை

அந்தநாள் என்னுடைய ஜன்னல் வழி பார்த்துக் கொண்டிருந்த
மரங்களை வளைத்துச் சொன்னேன்
அமைதியாய் இரு என்ன பார்த்துக்கொண்டிருக்கிறாய்?

மனஅழுத்தத்தில் மூச்சடைத்து இரவைக் கழித்தேன்
கனமான இதயத்துடன்
காற்றைப் பின்தள்ளி எவ்விதம் வந்தாய்
உனது அடர்ந்த இலை கிளைகளில்

ஏன்?
உனது துன்பம் என்ன?
இப்போது நான் பதிலை வெளிப்படுத்துகிறேன்
என் பார்வைக்குமேலே
கோயிலில் தெரியும் இந்த சில வரிகள்
யாரால் எழுதப்பட்டதென்று
யாருக்கும் தெரியாது
என்னால் வெறுமையிலிருந்து
அமிர்தம் எடுத்து
உயிர்ச்சிலையை வடிக்க முடியும்

மௌனத்தின் சொற்களை உடைத்து நீக்குவேன்
தாளவியலா வலியை ஏற்று
புதைமணலில் என் இரத்தத் துளிகளை வடித்து

Digitized by PPRACHIN, SOA

ஏன் நான் மட்டும் உனக்கான
பொன்னான வாய்ப்பினை உருவாக்க வேண்டும்

என் இதயக் கண்ணாடி தாங்கியுள்ளது
நம் அந்தரங்க உறவின் லட்சக்கணக்கான பிம்பங்களை
நான் வாழ்க்கையின் முடிவிலா பாதையில்
நடந்து கொண்டிருக்கிறேன்.

Digitized by PPRACHIN, SOA

21
பந்தம்

நாம் மாறுவேடத்திலிருந்தோம்
உறவெனும் மென்மையான பட்டு மேலாடைக்குள்ளே
ஆனால் உண்மையில் நான் பொறியில் சிக்கி
சித்திரவதைப்படும் எலியைப் போலிருந்தேன்

என்னுடைய காணிக்கைகள் தூக்கி எறியப்பட்டன
பெருந்தடைகளால்
என்னால் இறைவனின் பாதங்களைச்
சென்றடைய இயலவில்லை
இது நடவாது
கனவுகளின் இடத்தைச் சென்றடைவது

நம் சந்திப்பெனும் கத்தி மௌனங்களைக் கிழித்துத் திறந்தது
எனதுடல் எரிந்தது இரக்கமில்லா ஆணின் தொடர்பால்
நான் உயர்த்திய கரங்களுடன் உதவியற்றிருந்தேன்
சூரியோதயத்திலிருந்து அஸ்தமனம் வரை
என் வாழ்வின் ஜீவனைத் தொலைத்து விழிநீருடன்

தூரத்திலிருந்து அரிதாய் அர்த்தமுள்ள குரல்களின் தொகுதி
பறந்து வரும்
என் இதயத்தில் மூடிய இறகுகளுடன் அமைதியாய் விழும்
உடன் செந்நிறமாய் மலர்வேன்

Digitized by PPRACHIN, SOA

என் இதயத்தை தியாகத்தின் நெருப்பில் இட்டேன்
வலியின் அடையாளத்தைக்கூட காட்டாது
நீர் நிறைந்த பானை மண்குவியலில் உடைந்தது

துரோகத்தின் கரங்கள் அதிகம்
தெளிந்த ஆழமான நீரின் நீர்ச்சுழல் போல

நான் என்னுடைய ஒருஜோடி பாதி பழகிய விழிகளைத் திறந்திருந்தேன்
காலையின் அறியாத ஒரு மூலையில்
என் வாழ்வின் ஒவ்வொரு கணமும்
கடல் உறுமி குளிர் காற்று விசிறி அடிக்கிறது
மலையின் இன்னொரு பக்கத்திலிருந்து
அடர்ந்த சாம்பல்நிற மேகங்கள் எனக்கு விளக்கேந்துகின்றன
நீ ஏதேனும் உச்சரித்தாயா.

Digitized by PPRACHIN, SOA

22

நாளை காலை

மழையோ புயலோ இல்லை வானில்
இருந்தும் அலைகள் கொந்தளிக்கும் அலைகளாய் எழுந்தன

நான் படகாகவும் படகோட்டியாகவும் இருந்தால்
உன்னைச் சேர்வதே முடிவாக இருந்தால்
நாளை நான் சேரவேண்டிய இடம்
தூற்றும்போது
காற்றோடு போகும்
தூசியின் பிரிவாகலாம்
என்னுடைய கனவுகள் விசிறியெறியப்படலாம்
நான் எவ்விதம் அவனைச் சந்திப்பேன்

நாளை அடிவானில்
சூரியன்
உதிக்கலாம் உதிக்காமலிருக்கலாம்
முழு இரவும் நீரின் படுகையில்
படகு நிழலின் கீழே
கோழை நிர்வாணமாய் நடனமிட்டால்
எனது கனவின் மெல்லிய விதைகள் முளைவிடத் தவறினால்
உலர்ந்த பாலைவன மணற்பரப்பில்
எனது விழிகளெனும் வண்ணச் சிப்பிகளிலிருந்து
உடைந்த ஆசைகள்
தோன்றிய அதன் இடத்திற்கே திரும்பிச் செல்லலாம்

Digitized by PPRACHIN, SOA

உணர்வுகளின் பரிமாற்றத்தில் தோற்றபின்பு
வியாபாரிகளின் பேராசைக் கரங்களிலிருந்து தப்பித்தால்
எனது உணர்வுகள் பதியப்பட்ட கழுத்து ஆரம்
தூசியின் சுமையாகலாம்
நீரில் குதித்து ஒரு நட்சத்திரம் மறையும்
தூரத்து தொடுவானுக்கு அப்பால்
ஒற்றைப் பறவை ஒன்று
எங்கோ கரையில் சோககீதம் இசைப்பது கேட்கும்

என் பெயரும் அழிக்கப்படலாம்
நீரின் பரப்பிலிருந்து
அன்னத்தின் ராணியாய் நான்
அலைகளின் மேல் நின்று கொண்டிருந்தாலும்
ராணியாகவோ அல்லது பிச்சைக்காரி வேடமணிந்தோ
நாளை நான் சந்திக்கையில்
நான் அளிக்க வேண்டும்
இதுவரை உனக்கு அளிக்க இயலாததை.

Digitized by PPRACHIN, SOA

23
நான் போக வேண்டும்

நேற்று வாழ்வின் இனிய தோல்விகள்
என்னை அழைக்க வந்தன

விதைகள் முளைத்தன பூமியைப் பிளந்து
உன்னுடைய சத்தியத்திலிருந்து அழகிய இசை உருவெடுத்து
மெல்லிய குரல்களின் துண்டுகளாய் உடைந்து
நடனமிடும் என் ரத்த ஓட்டத்தில்
எனக்குத் தெரியவில்லை எத்தனை தடவையென்று
என்னுடைய நிலையை நானே பரிசுசித்தேன்
நான் தேனை ருசித்திருந்தேன்
தூக்கி எறிய இயலவில்லை
என் இளமையின் பிடியிலிருந்து
அந்த இனிய நறுமணத்தை

சிலதடவைகள் விண்ணை நோக்கி கூச்சலிட்டிருக்கிறேன்
வாழ்வின் மாயையில்
சிலமுறை காலத்தின் தோள்களில் சாய்ந்திருக்கிறேன்
அமைதியிலா முழு இரவைக் கழிக்க
அதனாலேயே போவதும் வருவதும்
எனக்கு வேறுபாட்டைக் காட்டவில்லை

Digitized by PPRACHIN, SOA

நான் எங்கும் நிறைந்தவள் ஒரு கணத்தில்
சிறு துடிப்பாய் குறைவேன் அடுத்த கணத்தில்
அவன் மறதி நிறைந்தவன் என நினைவுறுத்திய பின்னும்
நேற்றுவரை பயணம் செய்தேன் நீண்ட பாதையில்
என்னுடைய அதிர்ஷ்ட வரிகள்
சனி, சந்திரன் இடையே
பிணைக்கப்பட்டுள்ளன என்பதை மறந்து
எனக்கு நேரமில்லை
உனது கேள்விகளுக்கு பதிலளிக்க
நேரமில்லை
என் இருப்பின் உடைந்த துண்டுகளைச் சரிசெய்ய
இப்போது நான் போகிறேன், ஆம் இப்போது.

Digitized by PPRACHIN, SOA

24
முக்தி

எனது காலத்துக்குள் முழுமையடைய
உலகத்தின் அளவுகளை நான் வெட்டினேன்

கடைசி உயிர் மூச்சினை அவைகள் விட்டுவிடும் முன்னர்
கனவுகளின் விதைகளை விரல்நுனிக்கு மாற்றிக்கொண்டேன்
நட்சத்திரங்களிடம் விடைபெற்றுக்கொண்டேன்
உன்னிடமிருந்து ஓடிப்போய்விட்டேன்

நிறைவைத்தேடும்போது
அதன் ஒரு சுவையைப் பெற்றிருக்கிறேன்
எனது உடைந்த சிறகுகளைப் பழுதுபார்த்து
எல்லையற்ற வானில் பறந்துசெல்ல அனுப்பினேன்
என் விருப்பம்போல இவ்வுலகை நடக்கச் செய்தேன்

எனது பாடல்களை
நான் வார்த்தைகளின்றி எழுதினேன்
உலகிலிருந்து நான்
தனியே பின்னால் சென்றுவிட்டேன்
மண்ணில் விழுந்த பனித்துளிபோல்
பாடல்களாக முளைத்தேன்
வானத்து விழி இமைகளில் நான் கையெழுத்திட்டேன்
எனக்கு என்ன கிடைத்தது என்ன கிடைக்கவில்லை
என்னும் கணக்கு எதுவும் நான் வைத்துக்கொள்ளவில்லை
மேலும் அதிகமாக ஏதோ ஒன்றை விரும்புகிறேன்

Digitized by PPRACHIN, SOA

ஆனால் இங்கே
முழுநிறைவு என்று ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை
நான் ஏதோ ஒன்றை விரும்பினால்
அல்லது
பாடல்களின் மௌன மணத்தில்
கனவுகளின் உயிர்க்கருக்களில்
ஏதோ ஒன்றை நான் பெற்றால்
அதன் காரணம்
அதில் முழுவதும் நான் இருக்கிறேன்.

Digitized by PPRACHIN, SOA

25

இல்லாத கனவுகள்

குயில் பார்வைக்குத் தென்படவில்லை
இருந்தும்
இரயிலின் தொடர்ந்த சலிப்பூட்டும் இரைச்சலைக்
கிழித்துக் கொண்டு
அதன் பாடல் காற்றில் மிதந்து வந்தது
எனக்குள் என்னை ஒளித்துக்கொண்டேன்

என்னை நானே தொலைத்துவிட்டேன்
பின்பு என் பெயரை மேகங்களில் எழுதினேன்
அதனாலேயே அவை உருகி மழையாகின

ஜன்னல் வழியே பார்க்கும்பொழுது
அசையாத மலைகள், மரங்கள், வீடுகள்,
உன்னுடைய நினைவுகள் எல்லாமே
யாரோ ஒருவன் தீட்டிய ஓவியங்களாகத் தெரிகிறது
இப்பொழுது இங்கேயே அனைத்து உணர்வுகளையும்
உன்னுடைய கண்களில் தேக்கி
நீயே எனக்கு எதிரில் நிற்பதுபோலத் தெரிகிறது

எனக்குத் தெரியவில்லை நீ உண்மையிலேயே இருக்கிறாயா
அல்லது இருப்பது போல பிரமையா
அல்லது நிரந்தரமான நம்பிக்கையா

Digitized by PPRACHIN, SOA

முழு உலகும் உறங்கும்பொழுது
வினவும் விரல்களால் இருள் திரையை விலக்கிக்கொண்டு
வெளியே வந்தேன்
ஏதோ ஒரு நாட்டிலிருந்து வந்த காற்று
எனக்கு வழிகாட்டுகிறது
எனது உறங்கா மனம் விடாது தேடுகிறது
அவ்வப்போது விடுபட்டுப்போனாலும்
தூரத்திலிருக்கும் துருவ நட்சத்திரத்தை
மீண்டும் தொட்டுக்கொண்டிருக்கிறேன்

என்னுடைய விதியின்கோடு
பூமியின் நடுவில் எழுதப்பட்டுள்ளது
அவனுடைய பழிவாங்கும் குளிர்ந்த இரத்தத்தில் தோய்ந்து
மாயப் பொடியை என் மேல் தூவி
என்னை ஒரு புழுவாக மாற்றிவிட்டது
என்னுடைய எலும்புகள்
ஒரு மெல்லிய கயிற்றால் கட்டப்பட்டுள்ளது
முன்பு போல் நான் என்றும் இருக்கப்போவதில்லை
இன்றும் இனி நான் இல்லை என்றாகிவிட்டேன்

எனக்கு உணர்வு வந்ததும்
என்னைப் பார்த்து நானே சிரித்துக்கொண்டேன்
எனக்கு கீழே பூமி இருக்கிறது
காலடியில் பசும்புல் இருக்கிறது
எப்படி நான் மட்டும் இல்லாமல் போவேன்

எனது சேலையின் ஒவ்வொரு மடிப்பிலும்
ஒரு நதி ஓடுகிறது
எனது கழுத்துச் சங்கிலியின் பாசி ஒவ்வொன்றிலும்

Digitized by PPRACHIN, SOA

வானத்து நட்சத்திரம் பதிக்கப்பட்டிருக்கிறது
எனது பாடல்களில் அன்பின் கண்ணீர் இருக்கிறது
இருந்தும் எப்படி நான் இருப்பது மட்டும் தெரியவில்லை

தெளிவான பலமான காட்சிகளுக்குப் பின்னால்
ஏதோவொரு பரிதாபகரமான நிலை
அது என்னை சிரிக்கச் செய்கிறது
உறக்கமும் இன்றி கனவுகளும் இன்றி
நான் சூனியத்தில் கரைந்து விட்டாலும்
வானில் இருக்கும் துருவ நட்சத்திரத்தை
என்னால் தொடமுடிகிறது.

Digitized by PPRACHIN, SOA

26

நீ கிடைப்பது என்றால்

அவர்கள் சொல்கிறார்கள் நீ எனக்கு கிடைத்துவிட்டாயென
உண்மையில் எனக்கு நீ கிடைத்தாயா
நீ கிடைப்பதென்றால்
ஏரியின் மறுகரைக்குச் செல்வதைப்போல
அனைத்து மாயையையும் ஆன்மாவிலிருந்து விலக்கி
இருப்பை மல்லிகையின் நறுமணத்தால் அலங்கரித்து
உடலை மாயையால் மூடுவதுபோல

உண்மையில் நான் துள்ளிக்குதித்தேன்
படிகளில் பெரும் பரவசத்துடன்
எப்படிச் செய்தேனெனத் தெரியாமல்
நான் எனது சந்தேகத்தின் காரணத்தை
சங்கேத எழுத்திலிருந்து கண்டுபிடித்தேன்
நம்பிக்கையின் பொருள் நம்பிக்கையே
எவ்விதம் என்னுடைய தனிமை என்னைச் சூழ்ந்தது.
உன்னைத் தொட்டுவிட மட்டும்
எத்தனை காலம் சாலைச் சந்திப்பில்
நான் காத்திருந்தேன்
எப்படி நான் உயிர்பிழைத்தேன்
எலும்புகளும் துன்புறுத்தப்பட்டதிலிருந்து

நான் முழுக்க தனியே சுற்றித் திரிந்தேன்
எனது நகங்களால் கீறி மேகங்களைத் திறந்தேன்
வாழ்க்கையின் அர்த்தங்களைச் சுற்றி

Digitized by PPRACHIN, SOA

என்னைத் தொங்கவிட்டேன்
ஆரத்தின் நடுவே நட்சத்திரம் பதியப்பட்டிருந்ததுபோல
அதன் பொருள் என்ன என்றால்
நான் கனவு கண்டேன்
கனவினை உண்மையென ஏற்றுக்கொண்டு
நான் எழுந்தேன்
என் உடைந்த இதயத்தை ஆறுதல்படுத்த

அவர்களுக்கு எது தெரியச் செய்தது
நான் உன் காதலைப் பெற்றேன் என்று
எனக்குத் தெரியாது
யாரேனும் அறிவார்களா இல்லையா என்று
ஆனால் எனக்குத் தெரியும்
உன் காதலைப் பெறுவதென்றால்
வார்த்தைகள் அனைத்தையும்
இழக்கவேண்டுமென்று
அதன் அர்த்தங்களையும்
எனது காதல் சுமக்கும் இதயம் வீதிகளில் வீசி எறியப்படும்
உன்னுடைய காதலைப் பெறுவதன் அர்த்தம்
இனி எப்போதும் வார்த்தை இழந்து கிடப்பது.

Digitized by PPRACHIN, SOA

27

கரையின் மறுபக்கம்

யாரிருக்கிறார் கரையின் மறுபக்கத்தில்
வளைந்து இருளின் கடும் சுமையுடன்
பாதங்களை இழுக்கிறது காற்று

எவ்விதம் வலியின் மூர்க்கமான ஆவி
என் இதயத்தில் ஓடுகிறது
நொடிக்கொருமுறை என்னைக் கொன்றபடி

கவிஞனின் கனவுகள் தூசுகளாகச் சிதறி
மண்ணில் கலந்த புழுதியானது
இருந்தும் தூசியில் ஒளி இருந்தது
நீ சொல்வாய் தூசியில் இருக்கும்
சிறிய அணு என்னுடையதென்று
என்னுடையதாக இருக்கலாம்
அந்த பிரகாச ஒளியில்
என் காதலன் தன் வாழ்வைத் திரும்பப் பெறலாம்
பத்து வருடங்களின் இறப்புக்குப் பின்பும்

அவ்வொளியில் மரம் செந்நிறமாகும்
சாலைகள் உருகும்
ஏளனச்சிரிப்பு பரவும்
வானின் இப்பக்கத்திலிருந்து இன்னொரு முனைக்கு

Digitized by PPRACHIN, SOA

அதன் பிரகாசப் பரவலில்
உன்னுடைய தற்பெருமை உருகி
ஒன்றுமில்லாமல் போகும்
நான் என்னுடைய கரங்களை நீட்டுவேன்
ஆனால் என்னால் அடைக்கப்பட்ட
இருள் வாழ்க்கையிலிருந்து
அறிய இயலவில்லை
யாரிருக்கிறார் கரையின் மறுபக்கத்திலெனெ.

Digitized by PPRACHIN, SOA

28
கலங்கரைவிளக்கின் உள்ளே

நினைவுகளுக்கு உடல் இருந்தால்
நான் அதைத் தள்ளி தூர எறிவேன்
என் விழிப் பார்வையிலிருந்து

அவன் என் எதிரில் நிற்கிறான்
என்னை மூழ்கடிக்கிறான்
முடிவில்லாத வெள்ளமாய்ப் பெருகும்
அவனின் மந்திரப் பார்வையால்
நேற்று இன்று நாளை எந்த அடையாளத்தையும் பெறவில்லை
நம்பிக்கையின்மையின் நீண்ட நீரோட்டத்தில்

காட்டின் மலர்கள் குழப்பத்தில்
எதிர்பார்ப்புடன் மோதுகின்றன
உலர்ந்த வேர்கள்
இழந்ததையும் பெற்றதையும் எண்ணுகின்றன
என்னுடைய அரசித்தன்மைக்கு முக்கியத்துவமில்லை
சிம்மாசனத்தின் பொறாமையால்
மாயப் பார்வையின் போதையில்
நான் தொலைந்துவிட்டேன்
காலம் நிற்கிறது கற்பறவை போல

Digitized by PPRACHIN, SOA

விதை மண்ணினடியில் அதிர்கிறது
பூமி நடுங்குகிறது
காலைப்புல்லின் பனித்துளிபோல

இருந்தும் நான் பிழைத்து மறுபிறவி எடுக்கிறேன்
எத்தனை முறை என்பதை அறியேன்
ஆனால்
விழிகளிலிருந்து பொழியும்
கண்ணீரால் செய்யப்பட்ட நீரோட்டத்தில்
நீந்திக்கொண்டிருக்கிறேன்.

Digitized by PPRACHIN, SOA

29

கையெழுத்து

இது தூக்கமா அல்லது மரணமா
அல்லது ஆழம் காணமுடியாத படிக்கட்டு வளைவா
அல்லது வாழ்வினையும் இறப்பையும்
ஒரே சமயத்தில் காணும் அனுபவமா
பிரபஞ்சத்தின் ஊடே அடித்துப் பரவிய மின்னலில்
என்னை இப்பொழுது
ஒளிஅலைபோல விரித்துக்கொள்கிறேன்

நான் இதயத் தாமரையின் ஒரு மெல்லிய துடிப்பு
மேலும் வானில் அடிக்கும் இடியின் வெடிப்பும்
நான் தனிமையெனும் இருள் குகைகளில்
மழைபோல் சொரியும் மலர்களாய் மலர்கிறேன்
நான் எங்கே என என்னைக் கேட்கவேண்டாம்
நான் எங்கும் இல்லை

வலியும் மகிழ்ச்சியும் தமது அடையாளத்தை இழந்தபொழுது
ஒருவன் உருவமற்றுப் போகும்பொழுது
காற்று உருவம் பெரும்பொழுது
கடலின் முகத்துவாரத்தில்
அமைதியற்ற நதி பின்தங்கி நிற்கும்பொழுது
உன்னுடைய பந்தத்திலிருந்து என்னை நீ
விடுவித்தாயா விடுவிக்கவில்லையா
முடிவான பேரமைதியில்
முணுமுணுப்புகள் தொலைந்து போகின்றன

Digitized by PPRACHIN, SOA

ஆனால் உன்னுடைய மென்மையான இதயத்துடிப்புகள்
அந்தத் துன்பங்களிடையே ஓசையைப் பெறுகின்றன
என்னுடைய இரத்தத்தின் சிவப்பணுக்களில்
கவிதைகள் வருகின்றன புது அர்த்தத்தைச் சுவாசிக்கின்றன

உன்னுடைய அரவணைப்பெனும் கூட்டுக்குள்
சிறு வெண்பறவைபோல ஓய்வெடுக்க
என்னுடைய கண்களை நான் மூடுகையில்
நீ வானின் பால்வெளி ஆகிறாய்
மலர் இதழ்களின் மடியில் பனித்துளிபோல
நான் உன்னிடம் ஒட்டிக்கொள்கிறேன்

உருவமற்றவளாக நான் உருமாறுகிறேன்
மீண்டும் உருவமற்றதிலிருந்து உருக்கொள்கிறேன்
அது பொழிகிறது ஒளிவெள்ளத்தை
மலர்களின் மழையாய்
காலத்தை எதிர்த்து கடந்து
வலுவான பல ஆசைகள் உயிர்பெறுகின்றன
என்னுடைய பொன் இதய கருவறைக்குள்
அந்த ஒளிவீச்சின் ஒரு ஒற்றைக்கதிர் உருப்பெற்று
மீண்டும் மீண்டும் நான் பல உயிர்களுக்கான தாயாகிறேன்

ஒரு கைப்பிடி நிறைந்த மண்ணின் கருவறையிலிருந்து
ஒரு ஆலமரத்தின் கிளைகளில்
பாடல் உயிர்பெறுகிறது
இளம்பெண்ணின் உடலின் ஆழத்தில்
புதிதாய் உருவான கருவின் இதயத்துடிப்பு
வாழ்வின் ஒவ்வொரு உயிரின் உருவாக்கத்தின்போதும்
இருக்கும் அந்தத் தாய்மை நான்தான்.

Digitized by PPRACHIN, SOA

30
சிம்மாசனம்

சிம்மாசனம் காலியாக இருந்தது
படியில் ஏறும்போது நிறுத்தினர்
மாய சிம்மாசனத்தின் கண்களுக்குப் புலப்படாத தேவதைகள்
கேள்விகள் எதுவும் இங்கே கேட்கவில்லை

அவளின் அழகிய இளம் வதனம்
அவளின் கனத்த கொங்கைகள்
அவளின் அழைக்கும் பார்வைகொண்ட தொடைகள்
இனிமையான மந்திரக் குரல்
இவை கற்பனைக்கு அப்பாற்பட்டவை

ஓ! இளவரசே! வந்தவன் ஏன் நின்றுவிட்டாய்
இந்த வைரம் பதிந்த சிம்மாசனம் உன்னுடையது
வா வந்து அமர்
ஆம், எரியும் நெருப்பு உள்ளது இச்சிம்மாசனத்தில்
அஞ்சாதே
இது ஆசைகளைக் கொல்லும் நெருப்பு
மறைக்கும் சாதனத்தின் முகப்பால் உன்னை மறைக்காதே
என் இனிய இளவரசே

கோழைக்கு இடமில்லை காதலின் முடிசூடலில்
நியாயமான கேள்வியை உன்னிடமே கேட்டுக்கொள்

Digitized by PPRACHIN, SOA

உடலை அறியத் தயாராகு
அந்த அனுபவங்கள்
நெருப்பிலும் நீரிலும் வித்தியாசம் காணாது

உன் இதயத்தில் வை கையை
ஒருமுறையல்ல ஆயிரம்முறை
தொட்டுணர்வு அதன் துடிப்பை
உன்னுடைய சௌகரியங்களை அரசவீதிகளில் விட்டுவிடு
பெருமையெனும் அங்கியைக் களைந்துவிடு
பிறகு
ஓ! சிறந்தவனே சிம்மாசனம் ஏறு.

Digitized by PPRACHIN, SOA

31
நேசிக்க

அந்தநாள் வானம் தயாராக இல்லை
சிறுதுளி அன்புக்கு புகலிடமளிக்க

பூமி மூழ்கியது
பசும் இலைகள் மரங்களிலிருந்து உதிர்ந்தன
பயந்த பறவைகள் எங்கோ பறந்தன
லட்சக்கணக்கான கொலைகாரர்கள் கூச்சலிட்டனர்
லட்சக்கணக்கான வாள்கள் கூரியமுனைகளுடன்
பிரகாசமாய் ஒளிர்ந்தன

இன்று இல்லங்கள்
இயந்திரப் பறவைகளின் சலசலக்கும் ஒலியால் நிறைந்திருக்க
சுவர்கள்
உயிர்த்துடிப்பில்லா பசும் பிளாஸ்டிக் மரங்களால்
அலங்கரிக்கப்பட்டிருக்க
எதிர்பார்ப்புகளுடன் இயங்கும் உலகில்
அன்பிற்கான இடம் எங்கே இருக்கிறது.

Digitized by PPRACHIN, SOA

32

தூக்கி எறிய இயலவில்லை

இயலாத காரியமாயிருக்கிறது
பொருள்களைத் தூக்கி எறிவது
சிப்பியைக்கூட முத்தை எடுத்தபின்பும்
விட்டெறிய இயலவில்லை

பின்னே விட்டுச் செல்ல இயலவில்லை
அரை உடையணிந்த இளவரசியை வனத்தில்
இல்லையெனில் வாழ்க்கை முழுக்க ஒருவர் வருந்த நேரிடும்
முகத்தை நிலையாகத் தொங்கப் போட்டுக்கொண்டு

எந்த உறவும் உடைக்கப்பட இயலாது
பகைமையையும்
எதிரி கூட மனதில் வருவர்
காலத்தில்
மீண்டும் பகைமையுடன் ஒரு ஈர்ப்பான பந்தம்

பழத்தைக்கூட கிளைகளிலிருந்து பறிக்க இயலவில்லை
அதை எறிவதற்கும் சரியான இடமுண்டு
அதனாலேயே மாங்கொட்டையும்
குப்பைத் தொட்டியிலேயே போடப்படுகிறது
வேறெங்குமில்லாது

Digitized by PPRACHIN, SOA

ஆனால்,
நீ எனக்கு அளித்தாய்
உறைந்த உணர்வாய்
உன் இதயத்தின் குளிர்ச்சியை
விட்டெறிந்தாய்
என்னைச் சாலையின் ஓரத்தில்
எவனும் தன் எதிரியைக்கூட
இவ்விதம் விட்டெறியமாட்டான்.

Digitized by PPRACHIN, SOA

33
தேடுகிறாயா என்னை

தேடுகிறாயா என்னை
அழைக்கிறாயா என் பெயரைச் சொல்லி
ஒருமுறையல்ல பலமுறை நிச்சயமாக
நான் இங்கில்லை என்று தெரிந்த பின்பும்

என் பெயர் உச்சரிக்கப்படவில்லை
ராஜவம்சத்தாலோ அல்லது
செய்தியாக தம்பட்டமோ அடிக்கப்படவில்லை
நீண்டகாலங்களாக அடைக்கப்பட்டிருந்தது
ஆழமான நரகமெனும் மறதியில்

இச்செய்தி உன்னை வந்து சேரவில்லையா
இப்போது யாரும் என்னைப் பற்றிப் பேசுவதில்லை
ஏதோவொரு சந்தர்ப்பத்தில் யாரேனும் உச்சரிக்க நேர்ந்தால்
வார்த்தைகள் தூளாகி மௌனங்களில் மூழ்குகிறது
நீ யாரை வேண்டுமானாலும் கேட்கலாம்
இது உண்மையில்லை என நினைத்தால்

ஆனால் நான்
ஆரம்பத்தில் இருந்ததுபோலவே இருக்கிறேன்
என்னைப் பற்றிச் சொல்லிக்கொள்ளவும் இல்லை
பிறர் முன்னிலையில்
என்னைப் பார்க்க நிர்ப்பந்திக்கவும் இல்லை
என்னுடையதைவிட இனிமையான இசை இல்லை

Digitized by PPRACHIN, SOA

இதைச் சொல்லும் தைரியமும் எனக்கில்லை
உலர்ந்த வரிகள் இந்த உடைந்த சந்தங்களுடன்
சோகைக்குழந்தை போன்ற
தங்களுடைய மெலிந்த கரங்களால்
என் அணைப்பில் பாதுகாப்பைத் தேடுகின்றன
அந்த நொடியில்
ஒத்துழைக்காத எனது குரலினை
நான் சரி செய்கிறேன்

இதற்குப் பிறகும் நீ விரும்பினால்
நீ தேடலாம்
வேறெங்குமில்லை
அன்பால் பொங்கி வழியும் கண்ணீருடன்கூடிய
என்னுடைய கவிதை வரிகளில்.

Digitized by PPRACHIN, SOA

34

ஓவியன்

யார் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது
இருளுக்கு சற்று முன்னே
திறந்த ஏரியில் பிரதிபலிக்கும் அமைதியின் பரப்பில்
வானம் கருமேகங்களால் நிறைந்துள்ளதா
அல்லது பெரிய நீல அன்னத்தாலா

கவிஞன் அமைதியற்றிருக்கிறான்
பார்வைக்ககப்படா உலகுடன் இணைய இயலாமல்
செந்நிற தொடுவானத்தில் இருந்து
எவருடைய குரலோ காற்றில் மிதந்து வருகிறது
இசையின் முணுமுணுத்தலுடன்
எங்கும் நிறைகிறது

அருகிலுள்ள ஏரியில்
செந்நிற அல்லி புன்னகைக்கிறது
கலைஞனின் தோல்வியைச் சொல்வது போல்
ஓ! கலைஞனே!
என்னைக் கேலி செய்கிறாயா
உன்னுடைய படைப்பு
காலத்தால் தொடப்படாதென்று

Digitized by PPRACHIN, SOA

எழுதுபவனின் கண்ணீர்
ஏரியின் கரைகளை ஈரமாக்குகிறது
பெருமூச்சுடன் இதயம் உடைந்து திறக்கிறது
உன்னுடைய கண்ணாடியை
வானெனும் சுவரில் வைத்து
வசீகரிக்கும் வண்ணங்களுடன் வரையும் தூரிகை
யாரால் நிச்சயமாய் சொல்லமுடியும்
சரியாக உன்னுடைய இடத்தில்
அந்தப் பெரும் ஓவியச் சீலையின் முன்னே
நான் அமரமாட்டேனென்று.

Digitized by PPRACHIN, SOA

35

சாதாரண நிகழ்வுகள்

முழு வானும் ஊமையாகிவிட்டதா என்ன
என் பெயர் சொல்லி என்னை அழைக்காதா
பேருந்தின் ஜன்னல் வழி நுழைந்து
முடிவிலா வெறுமையின் முற்றத்தை
எனக்குக் காட்டாதா

எனக்கு சிறகுகளை வளர்ப்பதும்
பேருந்துப் பயணத்திலிருந்து பறப்பதும்
சாதாரண நிகழ்ச்சி

ஆனால் அவன் ஊமை தகடின் துகள் போல
எப்போதும் எனது கனவுகளை அறியமுடியாது

தினமும் துக்கத்துடன் வாழப் பழக்கப்பட்டுவிட்டேன்
அது அதன் அர்த்தங்களுடன்
வெளிச்செல்வதை நிறுத்திக் கொண்டது
அனைவரிடமிருந்தும் உறவை முறித்துக் கொண்டேன்

உனக்கு உறவே இல்லை எனும்போது
காதல் எனும் கேள்விக்கு இடமெங்கே?
காதலின் துரோகத்திற்கான வருத்தமும் இல்லை

Digitized by PPRACHIN, SOA

மழை தன்னுடைய சடசடவென பொழியும் உலகுக்குள்
இழுத்துச் செல்லவில்லை என்னை
என்ன எழுதுகிறாயென்றும் கேட்கவில்லை
அதனால் நான் உடைந்து வெளிவந்தேன்
மழையைப்போல், பழுத்த திராட்சைக் கொத்துகள் போல்
உணர்வுகளின் வெள்ளமாய்

ஏன் அந்தப் பறவைகள்
தங்களின் கூடுகளுக்குத் திரும்புகையில்
என் தலையில் இருக்கும் கூடையிலிருந்து
ஒரு அல்லது இரண்டு பழங்களை
அபகரிக்கவில்லை
அவை சந்தேகப்படுகின்றனவா
அவை தெரிந்து கொண்டனவா
நான் திட்டமிட்டு மந்திரத்தால் அவற்றை
ஆகாயத்தின் கீழே கட்டிப்போட்டுவிடுவேனென்று
அந்தத் திட்டமிடலுக்குப் பின்னே
எத்தனைமுறை நான் அழுதேன் அழாமல் இருந்தேன்

சுழன்றடிக்கும் ஏரியின் நீரோட்டம் போல்
பறவைகளின் பறத்தல்
எனது முற்றத்தில் பரவிக்கிடக்கிறது.
நானும் வெறுமையின் பறக்கும் படிகளில் ஏறியபின்பு
வானத்தில் கைநிறைய நட்சத்திரங்களைப் பறித்து
பாதைகளை ஒளிரச் செய்தேன்
எங்கெல்லாம் இருள் இருந்ததோ
அங்கெல்லாம் அவற்றை வைத்து
அவற்றின் கனத்தை அடர்த்தியை கவனத்தில் கொள்ளாது.

Digitized by PPRACHIN, SOA

36

சாட்சி

*கடுமையான மழையில்
எங்கோ பூமி தாகத்துடன் இருந்தது
விருந்தினரும் திரும்பிவிட்டனர்
ஒரு மிடறு நீரும் குடிக்கப்பெறாமல்*

*பறக்கும் சிம்மாசனத்தில் அமர்ந்து
வெறுமைக்குள் மறையும்
இந்த அரசியிடம் ராஜகம்பீரத்தின் அடையாளம்கூட இல்லை*

*அவள் சொர்க்கத்தின் நறுமணம் நிரம்பி வழிகிறாள்
அவளுடைய இதயத்தில்
இருளும் சோகமும் சுமையாய் கனக்க*

*மேகங்களின் மலையைக் கிழித்துக்கொண்டு
ஒளியின் நீர் பொழிந்து இறங்கியது
அடர்ந்த இலைப்படுகையில் படுத்துறங்கும் நிழலின் மேல்
தூரத்திலிருந்து எவரோ
உரக்க அழைக்கின்றனர் இருக்கச் சொல்லி*

*நீ எங்கேனும் பார்த்திருக்கிறாயா
சூரிய ஒளியே படாத இடத்தை
கதம்ப மலர்களின் கனவு
சிதறடிக்கப்படாத இடத்தை*

Digitized by PPRACHIN, SOA

சற்றும் நனையாத சிறு இடமும் இருக்கிறதா
இத்தனை கடுமையான பனிப்பொழிவில்
நானே சாட்சி இங்கே
இங்கே நான் உறைந்து கல்லாகிவிட்டேன்

அதீத அன்பால்
அதீத சரணாகதியால்
இதயம் சற்றும் மாறவில்லை இரக்கமாக
கண்கள் உருகவில்லை கண்ணீராக
வண்ணங்கள் ஒளிர ஆரம்பிக்கவில்லை
நானே சாட்சி
கொடூரமான அந்த எழுத்துகள்
என்னில் பச்சை குத்தப்பட்டதற்கு.

Digitized by PPRACHIN, SOA

37
அனைத்தையும் நேசிக்க

எதற்காக என்னை அழைத்தாய்?
என்ன மிச்சமுள்ளது நான் காண்பதற்கு

உன் புன்னகையின் அடியில் கர்வம்
உனது கருமித்தனத்தின் பரிசு
நத்தையின் இருளின் ஆழத்தில்
சகதியில் வாழும் வீண்வாழ்க்கை
உன்னுடைய நல்லவன் போல் நடிக்கும் தன்மை
உன்னுடைய கண்ணைக் கூசச் செய்யும் கிரீடத்தின் அடியில்
மறைந்திருக்கும்

இந்நாட்களில் எனது இதயம் கல்லாகிவிட்டது
எளிதாய் உரைகல்லாகலாம்
ஆயுதமாகலாம்
அல்லது அசைவிலா ஏதோ ஒன்றாகலாம்
வாழ்க்கையின் அதீத பொழிகையில்
சிலசமயங்களில் என்னால் என்னை மன்னிக்க இயலுகிறது
சிலசமயங்களில் என்னால் இயலவில்லை

மதிய சூரிய ஒளி கொஞ்சம் கொஞ்சமாய்
மறைய ஆரம்பிக்கிறது
ஏரியின் கரையில்
முழு இரவும் மஞ்சள் இலைகள் உதிர்கின்றன

Digitized by PPRACHIN, SOA

தூரத்து நட்சத்திரங்களின் மயக்கும் மணம்
உடன் தொலையும் இதயத்துடிப்பு
இவை வேறு ஏதொன்றுமில்லை
ஆனால் வாழ்க்கையில் அனைத்தையும் தொலைத்த அவ்விதயத்தின் எதிரொலியே.

இங்கே என்னை எதற்காக அழைத்தாய்?
நான் பின்னால் திரும்பிப் போகவேண்டும்
நான் என்னை மன்னித்தாலும் இல்லையென்றாலும்
இப்போது இந்த ஏரியை நேசிக்க
இந்த உதிர்ந்த இலைகளை,
இந்த நட்சத்திரங்களின் நறுமணத்தை
இந்த சூரிய ஒளி எனக்காகவே மறுபடியும் இறக்க.

Digitized by PPRACHIN, SOA

38

எனில், திரும்பிச் செல்லலாம்

*நீ என்னையா கேட்கிறாய்
அந்த நதியின் கரைக்குத் திரும்பிச் செல்லலாமென?
அடர்ந்த மூடுபனி இரு கரைகளையும் மூடியிருக்கும்
புலப்படாக்கொடி மாயை பொருளைச் சுற்றியிருப்பதைப்போல
நீர்ப்படுகையின் மேல் படர்ந்திருக்கும்
நான் டிசம்பர் மூடுபனியில் தெறிக்கப்பட்ட
விருப்பமில்லா சூரியக் கதிர்
நீதான் என்னுள் துடிக்கும் அந்த பரவசம்
எங்கே நாம் நின்று எந்த கண்டத்தில்
வருகின்ற வசந்தத்தில் எந்த வைகறையில்
நாம் மணல்கோட்டை கட்டுவோம்*

*நாம் புதுஒளியைப் பரவச் செய்வோம்
உலகின் கருத்த மூலையைக்கடந்து
மனிதகுலத்துக்கு அவர்களின் நிறைவேறும் கனவுகளைத்
திருப்பித் தருவோம்
அன்பென அழைக்கப்படும் மந்திரக்குச்சியின் தொடுதலால்*

*கடவுளின் ஆசைச் சிறகினை எடுத்து
எப்போதும் அலையும் அந்த நட்சத்திரங்களைத்
திரும்ப அழைப்போம்*

Digitized by PPRACHIN, SOA

நடனமிடும் நீரூற்றுப்படுகைக்கு
லட்சக்கணக்கான பறவைகளுக்கு உணவளிக்கத்
திரும்பிச் செல்வோம்
உலகின் பெரும் சோகத்தை நாம் சுமந்துகொண்டு
தூரத்து நெல்வயல்களில் ஆவியாகிவிடும்
மூடுபனியை பின்னேவிட்டு முன்னே செல்வோம்.

Digitized by PPRACHIN, SOA

மூல ஆசிரியர் பிரதிபா சத்பதி ஒரிய மொழியின் ம
முக்கியப் பெண் கவிஞர். சாகித்திய அகாதெமியின் பரிசு பெ
இவர். 11 கவிதைத் தொகுதிகளையும். 7 இலக்கிய விமர்ச
நூல்களையும். 7 மொழிபெயர்ப்பு நூல்களையும் செய்
அளித்தவர். 25 ஆண்டுகளுக்கு மேலாக 'இஸ்தஹ
எனும் முன்னணி ஒரிய இலக்கியக் காலாண்டிதழி
ஆசிரியராகத் தற்போது இருந்து வருகிறார். மத்திய சாகித்
அகாதெமி விருது. ராஜிவ் காந்தி சத்பாபனா விரு
கர்நாடகாவின் திருமலம்பா விருது ஆகியவற்றை
பெற்றவர். இத்தொகுதியிலுள்ள கவிதைகள் ஒரு சாதார
தூசு மந்திர சக்தி கொண்டு துலங்குவது எப்படி என்ப
ஆன்மிக அனுபவமாகவும். காதல் அனுபவமாக
தனக்கே உரித்தான கற்பனை வளத்துடன் பேசுகின்றன.

மொழிபெயர்ப்பாளர் மதுமிதா தமிழ். சமஸ்கிருத
இந்தி. தெலுங்கு. ஆங்கில மொழிகளை அறிந்த
சமஸ்கிருதத்திலிருந்து பருத்ரஹரியின் நீதி சதகம் 1
பாடல்கள் (2000). பருத்ரஹரி சுபாஷிதம் 300 பாடல்
(2005) ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்த
'மௌனமாய் உன் முன்னே' (2003). 'பாயுமொழி
எனக்கு' (2006) E Book ஆகியவை இவரது கவிதை
தொகுதிகள். 'நான்காவது தூண்' 18 இதழாசிரியர்கள
நேர்காணல்கள் (2006). 'தைவான் நாடோடி கதைக
ஆகிய தொகுப்பு நூல்கள் இவரது பங்களிப்புகள்.

...eekarikkum Dhoosi (Tamil)

Rs. 60.00

ISBN 812602692-8

Digitized by PPRACHIN, SOA